ஸ்ரீ

# அருணாசல
# பதிகம் அஷ்டகம்.

இவைகள்

திருவண்ணாமலை பிராஹ்மண சுவாமி

என்கிற

ஸ்ரீ ரமண மஹர்ஷி அவர்களால்,

அருளப்பெற்று


S. நாராயண ரெட்டியால்,

வேலூர்:

வித்தியா ரத்தினாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.



*Sri Ramana Maharshi.*

தீனர்களை ரக்ஷிக்கும்பொருட்டு குருமூர்த்தமாக
எழுந்தருளி திருஅண்ணாமலையில் பிரஹ்மானந்த ஸ்வ
ரூபராய் வீற்றிருக்கும் பிராஹ்மண பால்ய
ஸன்யாசி என்று வழங்கும்
ஸ்ரீ ரமண மஹர்ஷி.

ஸ்ரீ

# அருணாசல பதிகம்.

---

எழுசீரடியாசிரிய விருத்தம்.

1. கருணையா லென்னை யாண்டநீ யெனக்குன்
காட்சிதந் தருளிலை யென்று
லிருணலி யுலகி லேங்கியே பதைத்திவ்
வுடல்விடி லென்கதி யென்னு
மருணனைக் காணா தலருமோ கமல
மருணனுக் கருணனா மன்னி
யருணனி சுரந்தங் கருவியாய்ப் பெருகு
மருணமா மலையெனு மன்பே.

2. அன்புரு வருணா சலவழன் மெழுகா
யகத்துனை நினைந்துநைந் துருகு
மன்பிலி யெனக்கு னன்பினை யருளா
தாண்டெனை யழித்திட லழகோ
வன்பினில் விளையு மின்பமே யன்ப
ரகத்தினி லூறுமா ரமுதே
யென்புக லிடநின் னிட்டமென் னிட்ட
மின்பதெற் கென்னுயி ரிறையே.

3. இறையுனை நினையு மெண்ணமே நண்ணு
   வெனையுன தருட்கயிற் றாலீர்த்
திறையுயி ரின்றிக் கொன்றிட நின்றா
   யென்குறை யியற்றின னேழை
யிறையினிக் குறையென் குற்றுயி ராக்கி
   யெனைவதைத் திடலெதற் கிங்ஙு
னிறைவனா மருணா சலவெண முடித்தே
   யேகனா வாழிநீ டூழி.

4. ஊழியில் வாழு மாக்களி லென்பா
   லூதியம் யாதுநீ பெற்றாய்
பாழினில் வீழா தேழையைக் காத்துன்
   பதத்தினி லிருத்திவைத் தனையே
யாழியாங் கருணை யண்ணலே யெண்ண
   வகமிக நாணநண் ணிடுமால்
வாழிநீ யருணா சலவுனை வழுத்தி
   வாழ்த்திடத் தாழ்த்துமென் றலையே.

5. தலைவநீ யென்னைக் களவினிற் கொணர்ந்துன்
   றாளிலிந் நாள்வரை வைத்தாய்
தலைவநின் றன்மை யென்னவென் பார்க்குத்
   தலைகுனி சிலையென வைத்தாய்
தலைவநான் வலைமான் றனை நிகராதென்
   றளர்வினுக் கழிவுநா டிடுவாய்
தலைவனா மருணா சலவுள மேதோ
   தமியனார் தனையுணர் தற்கே,

6. தற்பர நாளுந் தாளினிற் றங்கித்
தண்டலர் மண்டுக மானேன்
சிற்பத நற்றே னுண்மல ரளியாச்
செய்திடி லுய்தியுண் டென்ற
னற்பதப் போதி னுனுயிர் விட்டா
னட்டதா ணுகுமுன் பழியே
வெற்புரு வருண விரிகதி ரொளியே
விண்ணினு நுண்ணருள் வெளியே.

7. வேளிவளி தீநீர் மண்பல வுயிரா
விரிவுறு பூதபௌ திகங்கள்
வெளியொளி யுன்னை யன்றியின் றென்னின்
வேறுயா னுருளன் விமலா
வெளியதா யுளத்து வேறற விளங்கின்
வேறென வெளிவரு வேனுர்
வெளிவரா யருணு சலவவன் றலையில்
விரிமலர்ப் பதத்தினை வைத்தே.

8. வைத்தனை வாளா வையகத் துய்யும்
வழியறி மதியழித் திங்ஙன்
வைத்திடி லார்க்கு மின்பிலை துன்பே
வாழ்விதிற் சாவதே மாண்பாம்
பைத்தியம் பற்றிப் பயனறு மெனக்குன்
பதமுறு மருமருந் தருள்வாய்
பைத்திய மருந்தாப் பாரொளி ரருண
பருப்பத வுருப்பெறு பரனே.

9. பரமநின் பாதம் பற்றறப் பற்றும்
பரவறி வறியரிற் பரமன்
பரமுனக் கெனவென் பணியறப் பணியாய்
பரித்திடு முனக்கெது பாரம்
பரமநிற் பிரிந்திவ் வுலகினைத் தலையிற்
பற்றியான் பெற்றது போதும்
பரமனு மருணு சலவெனை யினியுன்
பதத்தினின் றெுதுக்குறப் பாரேல்.

10. பார்த்தனன் புதுமை யுயிர்வலி காந்த
பருவத மொருதர மிதனை
யோர்த்திடு முயிரின் சேட்டையை யொடுக்கி
யொருதன தபிமுக மாக
வீர்த்ததைத் தன்போ லசலமாச் செய்தவ்
வின்னுயிர் பலிகொளு மிஃதெ
ஞேர்த்துய்மி னுயிர்கா ளுளமதி லொளிரீவ்
வுயிர்க்கொலி யருணமா கிரியே.

11. கீரியிது பரமாக் கருதிய வென்போற்
கெட்டவ ரெத்தனை கொல்லோ
விரிதுய ராலிப் பிழைப்பினில் விழைவு
விட்டுடல் விட்டிட விரகு
கருதியே திரிவீர் கருத்தினு ளொருக்காற்
கருதிடக் கொலாமலே கொல்லு
மருமருந் தொன்றுண் டவனியி லதுதா
னருணமா திரமென வறிவீர்.

# ஸ்ரீ
# அருணாசல அஷ்டகம்.

## எண்சீரடியாசிரிய விருத்தம்.

1. அறிவறு கிரியென வமர்தரு மம்மா
அதிசய மிதன்செய லறிவரி தார்க்கு
மறிவறு சிறுவய ததுமுத லருணா
சலமிகப் பெரிதென வறிவினி லங்க
வறிகில னதன்பொரு ளதுதிரு வண்ணா
மலையென வொருவரா லறிவுறப் பெற்று
மறிவினை மருளுறுத் தருகினி லீர்க்க
வருகுறு மமயமி தசலமாக் கண்டேன்.

2. கண்டவ னெவனெனக் கருத்தினு ணாடக்
கண்டவ னின்றிட நின்றது கண்டேன்
கண்டன னென்றிடக் கருத்தெழ வில்லை
கண்டில னென்றிடக் கருத்தெழு மாறென்
விண்டிது விளக்கிட விறலுறு வோனார்
விண்டிலை பண்டுநீ விளக்கினை யென்றால்
விண்டிடா துன்னிலை விளக்கிட வென்றே
விண்டல மசலமா விளங்கிட நின்றாய்.

3. நின்னையா னுருவென வெண்ணியே நண்ண
நிலமிசை மலையெனு நிலையினை நீதா
னுன்னுரு வருவென வுன்னிடின் விண்ணோக்
குறவுல கலைதரு மொருவனை யொக்கு
முன்னுரு வுனலற வுன்னிட முந்நீ
ருறுசருக் கரையுரு வெனவுரு வோயு
மென்னையா னறிவுற வென்னுரு வேறே
திருந்தனை யருணவான் கிரியென விருந்
தோய்.

4. இருந்தொளி ருனைவிடுத் தடுத்திட றெய்வ
மிருட்டினை விளக்கெடுத் தடுத்திட லேச
ணிருந்தொளி ருனையறி வுறுத்திடற் கென்றே
யிருந்தனை மதந்தொறும் விதவித வுருவா
யிருந்தொளி ருனையறி கிலரெனி லன்னோ
ரிரவியி னறிவறு குருடரே யாவா
ரிருந்தொளி ரிரண்டற வெனதுளத் தொன்று
யிணையறு மருணமா மலையெனு மணியே.

5. மணிகளிற் சரடென வுயிர்தொறு நானு
மதந்தொறு மொருவனு மருவினை நீதான்
மணிகடைந் தெனமன மனமெனுங் கல்லின்
மறுவறக் கடையநின் னருளொளி மேவும்
மணியொளி யெனப்பிறி தொருபொருட் பற்று
மருவுற விலைநிழற் படிதகட் டின்விண்
மணியொளி படவிழற் பதியுமோ வுன்னின்
மறுபொரு லருணநல் லொளிமலை யுண்டோ.

6. உண்டொரு பொருளறி வொளியுள மேநீ
யுளதுனி லலதிலா வதிசய சத்தி
நின்றணு நிழனிரை நினைவறி வோடே
நிகழ்வினைச் சுழலிலங் நினைவொளி யாடி
கண்டன நிழற்சக விசித்திர முள்ளுங்
கண்முதற் பொறிவழி புறத்துமோர் சில்லா
னின்றிடு நிழற்பட நிகரருட் குன்றே
நின்றிடச் சென்றிட நினைவிட வின்றே.

7. இன்றக மெனுநினை வெனிற் பிறவொன்று
மின்றது வரைபிற நினைவெழி லார்க்கென்
றொன்றக முதிதல மெதுவென வுள்ளாழ்ந்
துள்த்தவி சுறினொரு குடைநிழற் கோவே
யின்றகம் புறமிரு வினையிறல் சன்ம
மின்புதுன் பிருளொளி யெனுங்கன விதய
மன்றக மசலமா நடமிடு மருண
மலையெனு மெலையறு மருளொளிக் கடலே.

8. கடலெழு மெழிலியாற் பொழிதரு நீர்தான்
கடனிலை யடைவரை தடைசெயி னில்லா
துடலுயி ருனிலெழு முனையுறு வரைவி
லுறுபல வழிகளி லுழலினு நில்லா
திடவெளி யலையினு நிலையிலை புள்ளுக்
கிடநில மலதிலை வருவழி செல்லக்
கடனுயிர் வருவழி சென்றிட வின்பக்
கடலுனை மருவிடு மருணபூ தரனே.

---

அருணசலார்ப்பணமஸ்து.
ஓம். தத். ஸத்.

---

அரியாதியி தரசீவர தகவாரிச குகையில்
லறிவாரமி பரமாத்தும னருணசல ரமணன்
பரிவாலுள முருகாநல பரனார்ந்திடு குகையார்ந்
தறிவாம்விழி திறவாநிச மறிவாயது வெளியாம்.

---